# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.845/2022

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW - 8/PW-8 |
| Name | : திரு. கணேசன் |
| Father/Husband's Name | : சீனிவாசன் |
| Village | : நெ.17 ஏ, புதுத்தெரு |
| Taluk | : விநோபாநகர், புதுச்சேரி |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2026.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது புதுச்சேரியில் வசித்து வருகிறேன். நான் கணினி துறையில் 13 ½ வருடங்களாக Scientific Assistant/D1 ஆக பணிபுரிந்து வருகிறேன். கணினி சம்மந்தப்பட்ட அனைத்து Maintainance work பணிகளையும் நான் தான் பார்த்து வந்தேன். அதில் ஒரு பணி நெட்வொர்க்கிங் ஆகும். 06.05.2022 மற்றும் 07.05.2022 ஆகிய தேதிகளில் NUG workshop programme Department of Atomic Energy, GSO நடத்தினார்கள். Multipurpose Hall மற்றும் GSO ஆடிட்டோரியம் ஆகிய இரண்டு இடங்களில் நடத்தினார்கள். அந்த இரண்டு இடங்களிலும் Internet Connection வேண்டுமென்பதால் Nu–vision னை அணுகிய போது இரண்டு மோடம் பெற்று தருமாறு சொன்னார்கள். சென்னையை சார்ந்த Evershine Tech Solutions என்ற நிறுவனத்திலிருந்து இரண்டு மோடம் பெற்று கொடுத்தோம். அந்த இரண்டையும் கான்பிகரேஷனுக்காக கொடுத்த போது நியூவிஷனிடம் கொடுத்த போது ஒரு மோடம் தான் வேலை செய்வதாக சொன்னார்கள். வேலை செய்யாமல் இருந்த மோடத்தை Evershine Tech Solutions

நிறுவனத்திடம் கொடுத்த போது அதனை மாற்றி கொடுக்க இரண்டு நாட்கள் ஆகுமென்று சொன்னார்கள். அந்த புரோகிராமிற்கு இன்சார்ஜ் வனஜா மேடம். அவர்களிடம் மேற்படி விவரத்தை கூறிய போது அவரது வீட்டிலிருந்த மோடத்தை எடுத்து கொள்ளுமாறு சொன்னார். வனஜா என்பவரின் மோடத்தை எடுத்து கான்பிரகரேசனுக்காக நியூவிஷன் நிறுவனத்திடம் கொடுத்து கான்பிகரேசன் செய்யப்பட்டு அதனை Multipurpose Hall ல் Install செய்தோம். புரோகிராம் நல்லப்படியாக முடிந்தது.

அந்த வனஜா என்பவரின் மோடத்தினை மறுபடியும் கான்பிரேசன் செய்வதற்காக நியூவிஷன் நிறுவனத்திடம் கொடுத்த போது தற்போது FTTH 5G WIFI மோடம் வந்துள்ளதாகவும், வனஜாவின் பழைய மோடத்தினை பைபேக் பாலிஸியில் வாங்கி கொண்டு புது மோடம் தருவதாக கூறினார்கள். அது குறித்து வனஜாவிடம் போனில் தெரிவிக்கப்பட்டது. அவர் சரியென்று ஒப்புகொண்டதால் புது மோடம் கான்பிகர் செய்து நானே for என்று கையொப்பமிட்டு வாங்கி வந்து வனஜாவின் வீட்டில் இன்ஸ்டால் செய்தோம். மோடமும் வேலை செய்ய ஆரம்பித்தது. ஆஜர் எதிரி தான் வனஜா. அந்த நியூவிஷன் நிறுவனத்தில் குமரேசன் என்பவர் தான் மோடத்தினை கான்பிகர் செய்து கொடுத்தார். போலிசார் என்னை இது சம்மந்தமாக விசாரணை செய்தனர். நீதிமன்றத்தில் உள்ள மோடம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. சாட்சி அந்த மோடம் தான் கான்பிகர் செய்து எதிரியின் வீட்டில் பொறுத்தியதா என்று தெரியவில்லை என்றும், ஆனால் மோடம் அதே நிறுவனத்தை சார்ந்தது தான் என்றும் கூறுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

எதிரி தரப்பில் ஆஜர். ஆனால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.